# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்
## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016
## வரலாறு

தரம் - 09 நேரம் :- 2.00 மணி

சுட்டெண் :............................................ புள்ளி :- ………………

**பகுதி 1**

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1) இரட்டை ஆட்சி முறையின் கீழ் பிரித்தானிய அரசாங்கத்தால் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட ஆளுநர்

1. பிரட்ரிக் நோர்த் 2. ரொபட் பிரவுன்றிக்
3. தோமஸ் மெயிற்லனட் 4. பன் எங்கல் பெக்

2) பிரித்தானியர் இலங்கையின் கரையோரம் முழுவதையும் கைப்பற்றிய ஆண்டு

1. 1815 2. 1798 3. 1796 4. 1895

3) “அ” பகுதியில் உள்ள விடயங்களை “ஆ” பகுதியில் உள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| அ | ஆ |
|---|---|
| 1. 2ஆம் ஒரேஞ் வில்லியம் | A- புதிய வரிகள் |
| 2. டொரிங்டன் பிரபு | B- கியூக்கடிதம் |
| 3. தோமஸ் மெயிற்லன்ட் | C- தரிசு நிலச்சட்டம் |
| 4. ஆளுநர் மெக்கன்சி | D- யூரி சபை |

1. BDAC 2. BCDA 3. BCAD 4. BADC

4) வாரியப்பொல ஸ்ரீ சுமங்கலதேரரைச் சிறை வைத்த இடம்

1. கொழும்பு 2. வேலூர் 3. யாழ்ப்பாணம் 4. திருகோணமலை

5) “உங்களுடைய ஆயுதங்களால் உங்களைத் தாக்கமாட்டேன்” எனக் கூறி ஆயுதங்களையும் படைகளையும் திருப்பி அனுப்பியவர்

1. கொடேகெதர அதிகாரம் 2. மடுகல்லதிஸாவை
3. கெப்பிட்டிப்பொல திஸாவை 4. மொல்லிகொட

6) மலையகத்தைக் கைப்பற்றுவதற்குப் பொருத்தமான வழிகாட்டல்களை வழங்கிய ஆளுநர்கள்

1. தோமஸ் மெயிற்லன்ட், ரொபட் பிரௌன்றிக்
2. தோமஸ் மெயிற்லன்ட், பிரட்ரிக் நோர்த்
3. ரொபட் பிரௌன்றிக், டொரிங்டன்
4. ரொபட் பிரௌன்றிக், மெக்கன்ஸி

7) கல்வி கற்ற இலங்கையர் ஒருவருக்குச் சட்டவாக்கக்கழகத்தில் பிரதிநிதித்துவம் வழங்கிய யாப்பு சீர்திருத்தம்

1. கோல்புறூக் சீர்திருத்தம் 2. டொனமூர் சீர்திருத்தம்
3. சோல்பரி சீர்திருத்தம் 4. குறு-மக்கலம் சீர்திருத்தம்



kalvi.lk

8) அம்மை நோய்க்கான தீர்வாக அம்மைப்பால் கட்டும் முறையை இலங்கையில் அறிமுகம் செய்த பிரித்தானிய ஆள்பதி

1. பிரட்ரிக் நோர்த் 2. பிறவுண்றிக்
3. மெயிற்லண்ட் 4. வில்லியம் கிரகரி

9) இலங்கைப் பல்கலைக்கழகத்தை அமைப்பதில் முன்னின்று உழைத்தவர்.

சேரிப்புற மக்களின் நல்வாழ்வுக்கான சேவைகளில் ஈடுபட்டவர்.

இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாகக் காரணமாகத் திகழ்ந்தவர்.

மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய நபர்

1. சேர் பொன் இராமநாதன் 2. சேர் பொன் அருணாசலம்
3. D.S சேனாநாயக்கா 4. A.E குணசிங்க

10) "அ" பகுதியில் உள்ள விடயங்களை "ஆ" பகுதியில் உள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| அ | ஆ |
|---|---|
| 1. A.E குணசிங்க | A- கோட்டைச்சிங்கம் |
| 2. E.W பெரேரா | B- முதலாவது சிங்கள மேயர் |
| 3. சேர் பொன் அருணாசலம் | C- தேசபிதா |
| 4. D.S சேனாநாயக்கா | D- எமது அரசியல் தேவை |

1. BADC 2. BCAD
3. CABD 4. CBDA

11) பௌத்த மத மறுமலர்ச்சிக்காக ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்றது. அவை நடைபெற்ற இடமும் ஆண்டும் கீழே ஒழுங்கின்றிக் காணப்படுகிறது. அதனை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| இடம் | ஆண்டு |
|---|---|
| 1. பத்தேகம | A- 1871 |
| 2. வரா கொட | B-1866 |
| 3. உதம் மிட்ட | C-1865 |
| 4. கம்பளை | D-1864 |

1.CDBA 2.BADC 3.DCBA 4.DACB

12) இலங்கையின் இறுதி ஆளுநர் நாயகத்தினையும் முதலாவது பெயரளவு ஜனாதிபதியையும் குறிக்கும் விடை

1. சோல்பரி பிரபு 2. வில்லியம் கோபல்லவ
3. ஒலிவர் குணதிலக 4. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

13) கண்டியை ஆட்சிசெய்த ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனின் இயற்பெயர்

1. முத்துசாமி 2. மகா அஸ்தான 3. கீர்த்தி குமரன் 4 கண்ணுச்சாமி

14) சோல்பரி அரசியல் யாப்பு தெடர்பான பிழையான கூற்று

1. ஆளுநர் நாயகம் தொடர்ந்து முடியின் பிரதிநிதியாவார்
2. மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு
3. அரச கழகத்தில் 61 உறுப்பினர்
4. வெளிநாட்டு வியாபாரம், பாதுகாப்பு, பிரித்தானிய அரசின் பொறுப்பு

15) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனை 1762 இல் சந்தித்த பிரித்தானிய பிரதிநிதி

1. ஜோன்பைபஸ் 2. ஹியூபொய்ட் 3. ரொபட்அண்ட்றூஸ் 4. பன் எங்கல் பெக்

16) இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமையை வழங்கிய யாப்பு

1. டொனமூர் 2. சோல்பரி 3. மனிங் 4. குறு மக்கலம்

17) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினம்

1. 1815 மாரச் 18 2. 1815 மாரச் 02 3. 1815 மாரச் 10 4. 1815 பெப்ரவரி03

18) செனற் சபை அல்லது மூதவையில் உள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை

1. 95 2. 101 3. 30 4.131

19) "பிறந்த நாட்டால் பின்பற்றப்படும் சமயத்துக்கு எவ்வெவ் வகையிலும் எப்பங்களிப்பும் செய்யாது தாய்மண்ணுக்கு சுமையாக வாழ்வது முறையா இலங்கைப் புதல்வனுக்கு?" எனக் கூறியவர்

1. எஸ் மகிந்த தேரர் 2. மீகெட்டு குணாணந்த தேரர்
3. ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கல தேரர் 4. ஸ்ரீ தர்மலோக தேரர்

20) பௌத்த கதனோபாயகதனய என்னும் பெயரில் வினாவிடை வடிவிலான புத்தகத்தை எழுதியவர்

1. மீகெட்டு குணாணந்த தேரர் 2. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்

3. மகிந்த தேரர் 4. அநகாரிக தர்மபால

(20x2=40புள்ளிகள்)


Education கல்வி අධ්‍යාපන

## பகுதி II

முதலாவது வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக

01) அ 1. வரலாற்றுப்பாடத்தில் இரண்டாம் தவணையில் நீர் செய்த கணிப்பீட்டு வகை இரண்டு தருக

2. அக்கணிப்பீட்டுக்காகத் தகவல்களைப் பெற்றுக்கொண்ட வழிகள் இரண்டு தருக.
3. நீர் செய்த கணிப்பீட்டிற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் இரண்டைக் குறிப்பிடுக (6புள்ளிகள்)




ஆ தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி கீழுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான இடங்களைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை எழுதுக

1. 1915 சிங்கள-முஸ்லீம் கலவரம் ஏற்பட்ட இடத்தினைக் குறிக்கும் எழுத்து
2. அண்மையில் கொழும்பில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமாய் அமைந்த ஆற்றினைக் குறிக்கும் எழுத்து
3. கோல்புறூக் சிர்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் தலைநகரைக் குறிக்கும் எழுத்து



kalvi.lk

4. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள பண்டைய துறைமுகத்தைக் குறிக்கும் எழுத்து
5. 1818 சுகந்திரப் போராட்டம் ஆரம்பித்த இடத்தினைக் குறிக்கும் எழுத்து
6. 1873 இல் பௌத்த மத விவாதம் நடைபெற்ற இடத்தினைக் குறிக்கும் எழுத்து
(6×1=6புள்ளிகள்)

02) 1. இரட்டை ஆட்சி முறையின் தோல்விக்கான காரணங்கள் மூன்றினைத் தருக

(3புள்ளிகள்)

2. கேணல் மியூரன் குழுவின் ஆலோசனைகள் நான்கினைத் தருக (4புள்ளிகள்)
3. பிரித்தானியர் மலையகத்தைக் கைப்பற்றுவதற்கு ஆர்வம் காட்டியமைக்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக (5புள்ளிகள்)

03) 1. கோல்புறூக் சீர்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் மாகாணங்களின் நிர்வாக மையங்களைக் குறிப்பிடுக
A- வடக்கு -
B- மேற்கு (மேல்) -
C- தெற்கு தென் - (3புள்ளிகள்)
2. 1908இல் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் பிரித்தானிய அரசாங்கத்திடம் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக (4புள்ளிகள்)
3. குரு-மக்கலம் அரசியல் யாப்பில் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(5புள்ளிகள்)

04)

1. டொனமூர் அணைக்குழுவின் சிபார்சிற்கமைய உருவாக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களில் மூன்றினைக் குறிப்பிடுக (3புள்ளிகள்)
2. சோல்பரி அரசியல் யாப்பில் சில விடயங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு அனுமதி வழங்குவது இடைநிறுத்தி வைக்கும் அதிகாரம் அளுநர் நாயகத்திடம் காணப்பட்டது. அவற்றுள் நான்கினைக் குறிப்பிடுக (4புள்ளிகள்)
3. மேற்சபை உருவாக்கப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான நோக்கங்களில் மூன்றை குறிப்பிட்டு ஒன்றை விளக்குக (5புள்ளிகள்)

05) 1. பௌத்த கல்வி மறுமலர்ச்சிக்குப் பணியாற்றிய மூன்று தேரர்களைக் குறிப்பிடுக (3புள்ளிகள்)
2. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இயங்கிய மிஷனரிகள் நான்கினைக் குறிப்பிடுக (4புள்ளிகள்)
3. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களின் சேவைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக (5புள்ளிகள்)

06) 1. பின்வரும் ஆண்டுகளில் இலங்கையில் பிரதமராகப் பதவிவகித்த நால்வரைக் குறிப்பிடுக
a- 1952
b- 1953
c- 1956 (3புள்ளிகள்)
2. இலங்கையில் ஆளுநர்நாயகங்களாக பதவி வகித்த நால்வரைக் குறிப்பிடுக

(4புள்ளிகள்)

3. பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவல ஆட்சிக்காலத்தில் முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக (5புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457